# ஸ்ரீலங்காவிலிருந்து யாழ் குடா பிரிந்து விட்டது!

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 38 சித்திரை 6 ஷவ்வால் 3 இதழ்: 68
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19-04-1991

## 'ஏசியா வீக்' தகவல்

[பாங்கொக்]
''இலங்கையிலிருந்து யாழ். குடா நாடு தனியாக பிரிந்து விட்டது'' போர் சூழ்நிலையை விட வேறும் பல வழிகளில் பிரிந்துள்ளதை கடந்த 17 வருடங்களின் பின் அவதானிக்கக் கூடியதாயிருப்பதாக 'ஏசியா வீக்' சஞ்சிகை தெரி

(4-ம் பக்கம்பார்க்க)

## வடபகுதி சிவில் நிர்வாகம் புலிகளின் கட்டுப்பாட்டில்

(பாங்கொக்)
வடபகுதியில் சட்டம், ஒழுங்கையும் சிவில் நிர்வாகத்தையும் விடுதலைப் புலிகளே மேற்கொள்கின்றனர்.
இவ்வாறு விடுதலைப் புலிகள் பேச்சாளர் திரு. அன்ரன்

(4-ம் பக்கம் பார்க்க)

## 20,000 கட்டிடங்கள் யாழ்ப்பாணத்தில் அழிப்பு

(பாங்கொக்)
யாழ்ப்பாணத்தில் இலங்கை படையினரின் விமானக்குண்டு வீச்சில் சுமார் 20,000 கட்டிடங்கள் முற்றாக அழிந்துவிட்

(4-ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி பிரேமதாஸாவின்

# நாடாளுமன்ற உரையை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிக்கும்!

## அரசின் சர்வாதிகார போக்கிற்கும் கண்டனம்

[கொழும்பு]

இரண்டாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து இன்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா ஆற்றவிருக்கும் உரையை பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்ய எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

அரசின் சர்வாதிகார போக்கு பொருட்களின் விலைவாசி உயர்வு பொதுமக்கள் படுகொலை, தமிழர்மீதான வன்முறை ஆகியவற்றைக் கண்டித்தே இந்த பகிஷ்கரிப்பு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸா நாடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்க இன்று நாடாளுமன்றத்தில் நுழையும்போது அனைத்து எதிர்கட்சிகளும் நாடாளுமன்றைவிட்டு வெளிநடப்பு செய்யவேண்டுமென நவசமசமாஜக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; நாட்டில் ஜனநாயக முறைகள் பாதுகாக்கப்படவில்லை என்றும் சர்வாதிகாரப் போக்கும் எதிர்க்கட்சிகள் மீதான வெறுப்புணர்வும் அரசிடம் அதிகரித்துவருவதால் ஜனாதி

[2-ம் பக்கம் பார்க்க]

## பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)
நடாளுமன்ற கூட்டத்தொடரை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி ஆர். பிரேமதாசா செல்லும் வழியெங்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது:

[3ம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் பல இடங்களில்

## ராணுவத்தை வழிமறித்து புலிகள் கடும் தாக்குதல்!

(மன்னார்)
மன்னார் மாவட்டத்திலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா படைகளை வழிமறித்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.
மன்னார் ஆண்காட்டி வெளி

[2-ம் பக்கம் பார்க்க]

## 61 தமிழர்கள் படையினரால் கைது

(மட்டுநகர்)
வாழைச்சேனையில் நேற்றுக் காலை அரச படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் அறுபத்தியொரு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட அனைவரையும் விசாரணைக்காக படையினர் தம்முடன் அழைத்துச் சென்றனர். (ரி)

## 35,000 தமிழ் அகதிகள் மடு முகாமில் தஞ்சம்

(மன்னார்)
மன்னார் பகுதியில் இராணுவத்தினரின் கெடுபிடி அதிகரித்து வருவதால் ஆயிரக் கணக்கான பொது மக்கள் மடுத் தேவாலயத்தில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதாக தெரியவருகிறது.
முருங்கன், அடம்பன் பகுதிகளைச் சுற்றியுள்ள கிராமங்களை இராணுவத்தினர், விமானங்களாலும் தூரம் பாயும் ஷெல் குண்டுகளினாலும் தாக்கி வருவதினால் பொது மக்கள் தமது வீடுகளையும் கைவிட்டு மடுத்தேவாலயத்தில் உள்ள அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ள

[2-ம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் போரில்

## அனைவரின் பங்கையும் ஒருமித்து உணர்த்தியவர் அன்னை பூபதி

(யாழ்ப்பாணம்)
தேசம் மீட்கும் விடுதலைப் போரில் இளைஞர்கள், யுவதிகள் மட்டுமல்ல முதியவர்களின் பங்கும் முழுமையாக இருக்கின்றது என்பதைத் தன் உறுதியான உண்ணாவிரதப் போராட்டத்தால், உயிர்த் தியாகத்தால் உணர்த்தியவர் அன்னை பூபதி.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

அற்ப ஆசைகளுக்கு ஒருவர் பலியானதை வைத்துக்கொண்டு அன்னை பூபதியையும் அப்படியே ஆக்குவதனூடாக எமது விடுதலைப் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு இல்லையென்பதை நிரூபிக்க முயன்ற இந்திய அரசு அன்னையின் உறுதிமிகு போராட்டத்தை உடைக்க முடியாமல் திணறியது.

(2-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் யுத்தம் நீண்ட காலம் தொடரும்

(கொழும்பு)
இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் யுத்தம் நீண்டகாலம் தொடருமென்பதை இராணுவ அதிகாரி ஒருவர் நாசுக்காக தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு யுத்தம் எவ்வளவு காலம் நீடிக்குமென கேர்ணல் ரதத்திலுள்ள இராணுவ அதிகாரி ஒருவரை வெளிநாட்டு நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், இலங்கையில் வெளிநாட்டு நிருபர்களுக்கு நீண்டகாலம் செய்திசேகரிக்கக் கூடிய வாய்ப்பு உண்டென கூறி யுத்தம் நீண்டகாலம் தொடரும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். (ஸி)

## இலங்கை வங்கி நிவாரண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)
இலங்கைவங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை சனிக்கிழமை கீழ்வரும் கிராமசேவகர் பிரிவைச்சேர்ந்த குடும்பங்களுக்கு முன்னர் பெயர்குறிப்பிடப்பட்டு எடுக்கத் தவறியவர்களுக்கு மீளக்குடியமர்த்தல் தொழில் முயர்ச்சிகொடுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலை, அம்பாறையில் 6 படையினர் மரணம்

(கொழும்பு)
திருமலை, அம்பாறைமாவட்டங்களில் நேற்று இடம் பெற்ற மோதல்களின்போது ஆறு ஸ்ரீலங்கா படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
விடுதலைப்புலிகளுக்கு எதி

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இனும்

நீங்கள் சேர்த்து வைத்திருக்கும், ஜெயந்தி, துர்க்கா பத்திகளின் வெற்றுப்பக்கட்களை சேர்த்து கொடுத்துஇனும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள், அன்னை தொழிலகம், இனுவில். (ஏ 1228)

### தேவை

எமது நிறுவனத்திற்கு பெண்களினதும், சிறுவர்களினதும் ஆடைகள் வெட்டித் தைப்பதற்கு பெண் ஆசிரியர் தேவை. சிறிசுகன்னியா ஸ்ரோர்ஸ். இருபாலை சந்தி, கோப்பாய். (கி 4653)

பலசரக்குக் கடைக்கு நல்ல அனுபவமுள்ள பில் கிளார்க், விற்பனையாளர் தேவை. 21-04-91 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை நேரில் வரவும். 217/2, கடைச்சாமி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி 4657)

### விற்பனைக்கு

RX-F 2 F நம்பர் உள்ள 4 பாண்ட் 6 பற்றறி போடவுள்ள நாஷனல் றேடியோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 'ஈஸ்பரபதி', சுளாவடி புக்கைதின்னிப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டை. நேரம்: பி. ப. 12-30—4-30 மணிக்கிடையில். (சி 4655)

## நிர்வாக சேவை
### இன்று பயிற்சி முகாம்

(கொழும்பு)

நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்ட 245 அதிகாரிகளுக்கான பயிற்சி முகாம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகின்றது.

1988-ம் ஆண்டு அரசசேவையில் சேர்ந்துகொண்டு, தற்போது பல்வேறு இலாகாக்களில் அதிகாரிகளாகக் கடமையாற்றிவரும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கே நிர்வாகத்துறைப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கனடா அரசாங்கத்தின் உதவியுடன் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாம் முடிவடைந்தவுடன், வடக்கு-கிழக்கில் நிர்வாகத்துறையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை இந்த அதிகாரிகளைக் கொண்டு நிவர்த்திசெய்ய இருப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது. (வி)

## வாக்குவாதம்
### கைகலப்பில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

டீசல் விற்பனை செய்யும் இருவியாபாரிகளின் வாக்குவாதம் வாய்க்கடியிலும் கைகலப்பிலும் முடிந்தது. வியாபாரம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கலே இதற்குக் காரணமாகும்.

ஒரே இடத்தைச் சேர்ந்த ஜெயராஜா (22 வயது) என்பவருக்கும் சின்னச்சாமி சிவகுமார் (18 வயது) என்பவருக்கும் ஏற்பட்ட தகராறினால் வாய்க்கடியும், கைகலப்பும் ஏற்பட்டு இருவரும் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நல்லூர் செங்குந்தா ஒழுங்கையிலுள்ள குளத்தடியில் இடம்பெற்றுள்ளது. (56)

## வீரவேங்கை தீபனுக்கு
# பூநகரியில் அஞ்சலி

[மன்னார்]

அடம்பனில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் கடந்த 14-ம் திகதி காயமடைந்து 15-ம் திகதி வீரமரணமடைந்த வீரவேங்கை தீபனின் புகழுடம்பு நேற்று முன்தினம் பூநகரி வாடியில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பூநகரி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரமேஸ், மாணவர் முன்னணிப் பொறுப்பாளர் நிக்ஸன் உட்பட பலர் இரங்கலுரை ஆற்றினர்கள் உரையாற்றினர்கள்.

வட்டவைத் தலைவர் கே. ரி. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் பின்பு வீரவேங்கையின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பூநகரி பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (வி)

## மாடுகுத்தி காயம்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் மாட்டிற்கு வைக்கோல் போடச்சென்ற வீட்டுக்காரர் அம்மாட்டின் இருகொம்புகளினாலும் தாக்கியெறியப்பட்டு வலதுகை பாதிப்படைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் சுதுமலை வடக்குப் பகுதியில் வசிக்கும் பொன்னையா குணரட்ணம் (43 வயது) என்பவருக்கே இக் கதி நேர்ந்தது. (56)

## பலத்த

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி மாவத்தை காலிமுக மத்திய வீதியிலிருந்து கொள்ளுப்பிட்டி வரை, தர்மபால மாவத்தை அங்கிருந்து ஜயவர்தனபுர மாவத்தை ஆகிய வீதிகள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதுடன் ஆயுதமேந்திய படையினரின் ரோந்தும் இப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதிகளில் வாகனமெதுவும் காலை 7.00 மணி முதல் செல்லக்கூடாதென தடை செய்யப்பட்டுள்ளன. (பூ)

## யாழ். இந்துவில்
### மூத்தோர் கௌரவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா நிறைவாக முன்னோர் மூத்தோரைக் கௌரவிக்கும் வைபவம் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். இந்துவின் வெள்ளி விழாக் காலச்சேவை நாயகர்களைப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல், நூற்றாண்டு காலத்தில் சேவையில் இருந்த அதிபர்களின் ஓவிய உருவங்களை திரைநீக்கம்செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (152)

## 35,000 தமிழ்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரி.

மேற்படி அகதி முகாமில், தற்போது பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ள தினால், இலுப்பைக்குளத்தில் புதிய அகதிமுகாம் ஒன்றை ஐ. நா. அகதிகள் தூதராலயம் திறந்துள்ளது.

இந்த அகதிகள் முகாம்களில் தற்போது முப்பத்தையாயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் இருப்பதனால் அங்கு பலத்த உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (வி)

## விடுதலைப் போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏகாதிபத்திய அரசுகளின் இரும்புப்பிடிக்குள்ளோ தந்திர வலைகளுக்குள்ளோ சிக்கிடமுடியாத வலுவானபோராட்ட சக்தியாக எமது விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்து வருகின்றது. எங்கள் உறுதிமிகு போராட்டத்தை உடைத்திடவே முடியாது என்ற எல்லைக் கோட்டிற்கு எதிரிகள் தங்களை நகர்த்திக் கொண்டாலும் இயன்றவரை தமிழ்மக்களை அழித்துத்தான் பார்ப்போமே என்ற பாவனையில் எமது மக்களை கொன்றொழித்துவிட முயன்று வருகின்றனர். ஆனால் தனது அழிப்பு நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் எமது மக்களின் உறுதிக்கு உரமாகி வருகின்றன என்பதை ஸ்ரீலங்கா அரசு உணரத் தவறிவிட்டது.

மக்கள் வேறு புலிகள் வேறு அல்ல என்பதை இலவாத அரசு உணர்ந்து கொண்டுள்ளது என்பதைத்தான் அரசின் ஆகாயத்தாக்குதல்களும் தரைகடல் தாக்குதல்களும் வெளிப்படுத்தி நிற்கின்றது. அரசின் அடக்குமுறைகளாலும் ஆக்கிரமிப்பு அதிகாரங்களாலும் நாம் நிலைகுலைந்து விடப்போவதில்லை என்பதை அரசுக்கு உணர்த்துபவர்கள் போராளிகள் மட்டுமல்ல போராளிகளாக மாறிவரும் மக்களும் தான்.

அந்தவகையில் 19-4-88ல் சர்வதேசமும் அதிர்ந்த ஓர் நிகழ்வு நடந்தது. அதுதான் தென்தமிழீழக் கிராமமான கிரான் மண் தந்த வீரத்தாய் அன்னை பூபதியின் தியாக மரணம். காந்தீயம் பேசும் இந்தியாவின் போலித்தனத்தையும் வெளிப்படுத்திக் காட்டிவிட்டு வீரமரணம் அடைந்தான் லெப்ரினன்ட் கேணல் திலீபன். அந்த வேளையில் அதிர்ச்சியால் உறைந்த உலகம் அதிலிருந்து மீண்டு தன் இயக்கத்தை தொடரும் முன்பே மீண்டும் ஓர் அதிர்ச்சி, அன்னை பூபதியின் புரட்சி தந்த அதிர்ச்சி அது.

அமைதிப்படை என்ற பெயரில் ஆக்கிரமிப்பு இராணுவத்தை எமது மண்ணுக்கு அனுப்பி எமது விடுதலைப் போராட்டத்தை வேரோடு சாய்த்துவிடலாம் என்ற நினைப்பில் எமது மக்களை தினமும் வதைத்து மகிழ்ந்து கொண்டிருந்த இந்தியாவின் இரட்டை வேடத்தை உலகுக்கு புரியவைத்ததில் அன்னை பூபதியின் பங்கும் மகத்தானது.

தாயக மானத்தைக் காப்பாற்றவும், தமிழரின் சுதந்திர வாழ்வை மீட்கவும் தமிழ்ப் பெண்களுக்குரிய கடமையை உணர்ந்து முதுமைப் பருவத்திலும் முழுதான பங்களிப்பை செய்யும்நோக்குடன் அகிம்சை வழியில் போராட எண்ணிய வீரத்தாய் 32நாட்களும் உண்ணாவிரதம் இருந்து அணு அணுவாகத்துடித்துக்கொண்டிருந்த போது அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்றோம் எனப்பெருமை பேசிக்கொண்டிருந்த பாரதம் அதனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது என்பதை அன்னை பூபதியின் தியாக மரணம் சர்வதேச அரங்கிற்கு புரியவைத்தது.

சுதந்திர தேசத்தை மீட்டெடுக்க சுகங்களைத் துறந்து போராட மக்கள் தயாராக உள்ளார்கள் என்பதை இந்திய அரசுக்குமட்டுமல்ல எமது விடுதலைப்போராட்டத்தை நசுக்க முயலும் அனைத்து எதிரிகளுக்கும் தன் தியாக மரணம் மூலம் உணர்த்தினாள் அன்னை பூபதி.

உறுதியான உள்ளமும் உண்மையான விடுதலை உணர்வும் தாயக மீட்புக்காக தம்உடல் பொருள் ஆவியை விருப்புடன் துறந்துவிட தயாராக இருக்கும் மனப்பாங்கும்தான் விடுதலைப்போராட்டத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பன என்பதை அகில உலகிற்கும் உணரவைத்துக் கொண்டிருக்கிறது எமது விடுதலைப் போராட்டம்.

ஆக்கிரமிப்புக்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும் எங்கள் இலட்சியப்பாதையின் தடைக்கற்கள் தானேயன்றி தகர்த்திட முடியாத தடைகளல்ல. உறுதியுடன் போராடுவோம்! உண்மையான விடுதலையை வென்றெடுப்போம்.

## மன்னாரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் இருந்து பரப்புக்கடந்தானுக்கு இராணுவத்தினர் முன்னேறிவந்தபோது விடுதலைப் புலிகள் இடைமறித்து தாக்கியதில் இராணுவத்தினர் பின்னுக்கோ அல்லதுமுன்னுக்கோ நகரமுடியாத நிலையிலிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இராணுவத்தினர் ஒரு அவ்ரோ, மூன்று பொம்மர் விமானங்களின் உதவியுடன் மேற்படி பகுதியிலிருந்து முன்னேற முயன்றபோதே இம்மோதல் ஏற்பட்டது.

மேற்படி மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாமென்றும் புலிகள் தரப்பில் 2வது லெப். ரைகன், இளங்கோ ஆகிய இரு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

இதே இராணுவத்தினர் மறுநாள் புதன்கிழமை காலை 6-30 மணிக்கு அவ்ரோ, வை-12, ஹெலி ஆகியவற்றின் உதவியுடன் மீண்டும் முன்னேற முயன்றபோது, புலிகளின் கடும் தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாது அதே இடத்தில் தரித்து நிற்கின்றனர்.

இதேநாள் பகல் 11மணிக்கு இராணுவத்தினருக்கு உதவிக்குவந்த மூன்று பொம்மர் விமானங்கள் நான்கு குண்டுகளை வீசியது. பின்பு மாலை 5 மணிக்கு அதே இடத்துக்கு வந்த வை-12 ரக விமானம் எட்டுக் குண்டுகளையும், அவ்ரோ விமானமொன்று நான்கு குண்டுகளையும் வீசித் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்களில் புலிகள் தரப்பில் ஜீவா (மட்டுநகர்), நாயகன் (வவுனியா) ஆகிய வீரவேங்கைகள் வீரமரணம் அடைந்தனர்.

வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (வி)

## கிரிக்கெட்!

## வர்த்தக பிரதிநிதிகள்
## இன்னிங்ஸால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வர்த்தகப் பிரதிநிதிகள் கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் வர்த்தக பிரதிநிதிகள் கோஷ்டி இன்னிங்ஸ் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வர்த்தக வங்கி முதல் இன்னிங்ஸில் 47 ஓட்டங்களையும் 2-வது இன்னிங்ஸில் 44 ஓட்டங்களையும் பெற்றது.

வர்த்தகப் பிரதிநிதிகள் கோஷ்டியின் காப்டன் அருள் சிறப்பாக பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

வர்த்தகப் பிரதிநிதிகள் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 92 ஓட்டங்களைப் பெற்றது; ஜேக்கப் 28 ஓட்டங்களைப் பெற்றார். (வி)

## பருத்தித்துறை
# கொள்ளைகள் பற்றி
# புலிகளிடம் புகார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் இரவு வேளையில் கடைகள் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்பாக இப்பகுதிமக்கள் பலத்த அச்சமும் கவலையும் அடைந்துள்ளனர்.

இக்கொள்ளைகளைத் தடுக்க உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். பருத்தித்துறை நகரில் கடந்த ஒருமாத காலத்திற்குள் நான்கு கடைகள் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15ம் திகதி பருத்தித்துறை வெற்றிலைக்கின் வேக்ஸ் உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. அதன் பின்னர் அகிலன் கூல்பார், சந்திரன் றெட்டிச்சாலை என்பன உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன; கடந்த 8ம் திகதி இரவு பருத்தித்துறை நகரசபை பொதுசன நூலகத்துக்கருகாமையிலுள்ள 'சிவாமினி ஷொப்' இரவுவேளை உடைக்கப்பட்டு சுமார் 10,000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக்கொள்ளைகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

ஈராக் கடும் எதிர்ப்பு

# வடக்கு ஈராக் நோக்கி அமெரிக்க படைகள் விரைவு

(பாக்தாத்)

'குர்திஷ்' அகதிகளுக்கு தனி முகாம்கள் அமைப்பதென அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்தபின் அமெரிக்கபடைகள் வடக்கு ஈராக்கினுள் நுழையத் தொடங்கிவிட்டன.

முதல் படையணி முகாம்களை அமைப்பதற்கான இடங்களைத் தேடி வருகின்றதாம். அடுத்த சில தினங்களில் பதினாயிரம் படையினர் இப்பகுதியினுள் அனுப்பப்படவுள்ளனர்.

பிரிட்டன், பிரான்ஸ் உட்பட ஐரோப்பிய சமூக நாடுகள் இத்திட்டத்தை ஆதரித்துள்ளன. சோவியத்தும் சீனாவும் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஈராக்கின் உள்விவகாரத்தில் அமெரிக்கா வேண்டுமென்றே தலையிடுவதாக ஈராக் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

துருக்கியை ஒட்டிய ஈராக்கிய எல்லையில் 5 அல்லது 6 முகாம்கள் அமைக்கப்படும். இதற்காக பிரிட்டனும், பிரான்சும் தமது படைகளையும் அங்கு அனுப்பவுள்ளன.

# நல்லூர் கைலாசபிள்ளையார் வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கைலாசபிள்ளையார்கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று 19ம் திகதி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம்மாதம் 26ந் திகதி வெள்ளி மாலை 5 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 27ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28ந் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நிகழும்.

# அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு சந்திரசேகர் நிராகரிப்பு

(புதுடில்லி)

பஞ்சாப்பிலும், அஸாமிலும் தேர்தல் நடாத்துவது பற்றி விவாதிக்க அனைத்துக்கட்சிக் கூட்டம் கூட்டப்படவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை பிரதமர் திரு. சந்திரசேகர் நிராகரித்துவிட்டார்.

பெரிய அரசியல்கட்சித்தலைவர்களுடன் இந்தப் பிரச்சனை பற்றி விவாதிப்பதில் பயனெதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

அடுத்தமாதம் லோக்சபா வுடன் சேர்த்து இவ்விருமாநிலங்களிலும் தேர்தல் நடாத்த வேண்டிய அவசியமில்லை என்றும் பிரதமர் கூறினார். (சி)

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புலமைப் பரிசில்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தினால் கலைப்பீடத்திற்கான புலமைப் பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

செல்வி மாதவி (தமிழ்) செல்லம்மா இராசேந்திரன் நினைவுப் புலமைப் பரிசில்.

எஸ். சிவானந்தன் (இந்து நாகரீகம்) நகுலாம்பிகை மகாதேவா புலமைப்பரிசு.

ரி முரளீதரன் (பொருளாதாரம்) தில்லைநாயகி கனகசபாபதி புலமைப்பரிசில்.

வி பிரதீபன் (கலைப்பீடம்) ஹண்டி பேரின்பநாயகம் புலமைப்பரிசு

எம் ஜெயந்தன் (வர்த்தகம்) இரத்தினசபாபதி முத்துச்சாமி புலமைப்பரிசு.

செல்வி வி. சித்ரா (பொருளாதாரம்) சேர் அருணாசலம் மகாதேவா புலமைப்பரிசு.

செல்வி எம். சரோஜினிதேவி (தமிழ்) கமலாதேவி வித்தியானந்தன் நினைவுப் புலமைப்பரிசு.

செல்வி எஸ். சுதாமதி (இந்தநாகரீகம்) டாக்டர் ஆனந்தகுமாரசாமி நினைவுப் புலமைப்பரிசு.

செல்வி ரி. எஸ். நித்தியலட்சுமி (கலைப்பீடம்) டாக்டர் சின்னத்துரை நினைவுப் புலமைப்பரிசு.

செல்வி ரீ எஸ். நித்தியலட்சுமி சிறீஸ்கந்தராசா நினைவுப் புலமைப்பரிசு.

கே. இராசேந்திரன் (புவியியல்) சிவகாமி முருகேசர் நினைவுப் புலமைப்பரிசு.

ஏ. அன்ரன் ஜெயக்குமார் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் புலமைப் பரிசு.

செல்வி ரீ எஸ். நித்தியலட்சுமி ஜீவரத்தினம் நினைவுப் புலமைப்பரிசு. (152)

பருத்தித்துறை இலங்கை வங்கி வாடிக்கையாளருக்கு

# கொடுப்பனவுக்கு அறவிட்ட தரகுப்பணம் வழங்க உத்தரவு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை இலங்கை வங்கி வாடிக்கையாளரிடம் வங்கிக்கொடுப்பனவுக்கு அறவிட்டதரகுப் பணத்தை மீண்டும் அந்த வாடிக்கையாளருக்குத்திருப்பிச் செலுத்தவேண்டுமென்ன இலங்கை வங்கிப் பிரதிப் பொதுமுகாமையாளர் யாழ். பிரதேச முகாமையாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பருத்தித்துறை இலங்கை வங்கி வாடிக்கையாளரான திரு எஸ். ஆடியபாதம் வன்செயல்கள் அதிகரித்தமையால் வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை மீளப்பெற முடியாமல் அவதிப்பட்டார்.

இது சம்பந்தமாக இலங்கை வங்கி தலைமையகத்திற்கும் அறிவித்தும் பலன் கிடைக்கவில்லை; அவசரதேவை காரணமாக 4-10-90 வங்கியில் கொடுப்பனவு உத்தரவைப் பெற்றார். இக்கொடுப்பனவு உத்தரவுக்கு வங்கி 50 ரூபா வைத் தரகாகப் பெற்றுக்கொண்டது. வங்கி வாடிக்கையாளரொருவருக்குத் தனது கடமையைச் செய்யத் தவறியமையினால் அவ்வாடிக்கையாளர் 50 ரூபாவை இழந்தார்.

வங்கி வாடிக்கையாளருக்குக் காசோலையை வழங்கும்போது பணத்தை வழங்கவும் அல்லது அவரது கணக்கிலிடவும் ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது வங்கியின் முக்கிய நடைமுறையாகும். ஆனால் பருத்தித்துறை வங்கி இந்த அடிப்படை உரிமையை வழங்கத் தவறிவிட்டமையினாலேயே வாடிக்கையாளர் வங்கி கொடுப்பனவு உத்தரவைப் பெறவேண்டி ஏற்பட்டது. பின்னர் கொடுப்பனவு உத்தரவைப் பணமாக்க அவர் இன்னொருவருக்கு 50 ரூபாவும் செலுத்த வேண்டியது ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை வங்கி மேற்கொண்ட இந்நடவடிக்கை சரியானதா? என இவ்வங்கி வாடிக்கையாளர் இலங்கை வங்கி தலைமையகத்திடம் கேள்வி எழுப்பியிருந்தார். இதனைத் தொடர்ந்தே இலங்கை வங்கி பிரதி பொதுமுகாமையாளர் (செயல்முறை) இவ் வாடிக்கையாளரிடம் அறவிட்ட வங்கிக் கொடுப்பனவு உத்தரவுக்கான தரகுப் பணத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டிய உத்தரவைப் பிறப்பித்தது (52)

# இராசி பலன்

19-04-1991

வெள்ளிக்கிழமை

பஞ்சமி பி. ப. 3 33 வரை. மிருகசீரிடம் மாலை 5-59வரை. சித்தயோகம் கரிநாள்: இராகு காலம் காலை 10-32 முதல் 12-02 வரை. சுபநேரம் மாலை 6-02 முதல் 7-32 வரை.

மேடம்: வாழ்வில் வசதி, தொழிற்றுறை வளர்ச்சி, மனநிறைவு.

இடபம்: வாக்குவாதம், அதிகாரசித்தி, அவமதிப்பு.

மிதுனம்: நற்பணி, தொழில் பாராட்டு, காரியசித்தி.

கடகம்: இடையூறு அந்நியவாசம், அமைதி குன்றல்.

சிங்கம்: தொழில்போட்டி. குடும்பசுகம், சகோதரபகை.

கன்னி: வழிதவறுதல், குடும்ப கவலை, தடுமாற்ற நிலை.

துலாம்: பயந்த நிலை குடும்ப கலகம், அகாலபோசனம்.

விருச்சிகம்: இனசனப்பகை, நீண்டபயணம், வெகுமானம்.

தனுசு: கீழோர் சகாயம், விவாதம், குடும்பமகிழ்ச்சி.

மகரம்: விருந்துபசாரம், தொழில் சிறப்பு: பெண்வகை பாராட்டு.

கும்பம்: தொழில் பிணக்கு, குடும்பபிரிவு, வைத்தியச் செலவு.

மீனம்: தனித்திருத்தல். குடும்ப கஷ்டம், வேண்டாத பிரச்சனை.

• ஜோஸ்யர்

போதிய மின்சாரமில்லை யாழ். ஆஸ்பத்திரி

# இரத்த வங்கி பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சேமிப்பிலுள்ள இரத்த வகைகள் பழுதடையும் நிலையிலுள்ளன. இவற்றினைப் பாதுகாக்கும் குளிரூட்டிகட்கு போதியளவு மின்சாரம் மின்பகுதியினரால் வழங்கப்படாததே காரணமாகும்.

முழுமையாக மின்விநியோகம் கிடைத்தால் மட்டுமே இரத்தங்களை பாதுகாத்து வைக்க முடியும். பகுதி பகுதியாக மின்சாரப்பகுதியினர் மின்விநியோகத்தினை வழங்குவதால் இரத்தத்திலுள்ள உயிர் அணுக்கள் இறக்கும் தன்மையடையும் நிலை ஏற்படுவதனால் இரத்த வகைகள் பழுதடைய வேண்டிய நிலை யேற்படும்.

முழுமையான மின்சாரத்தினை வழங்குவதற்கு மின்சாரப்பகுதியினருக்கு ஜெனரேட்டர் வசதிக்குறைவு காரணமென்று தெரிவிக்கப்படுவதாகவும் இந்நிலை தொடர்ந்து ஏற்படுமானால் இரத்தங்களை சேமிக்க முடியாத நிலையேற்படும் எனவும் இரத்தவங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## புதிய உதவி அரச அதிபர்

[கொழும்புத்துறை]

யாழ். புதிய உதவி அரசாங்க அதிபராக யாழ். செயலகத்தைச் சேர்ந்த பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. எஸ். நித்தியராசா நியமனம் பெற்றுள்ளார். (154)

## நாடாளுமன்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதியின் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்வகையில் அனைத்து எதிர்கட்சிகளும் வெளிநடப்புச் செய்யவேண்டும்,

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் போர் நடவடிக்கையினால் பொதுமக்களின் வாழ்வு நரகம்போலாகிவிட்டது என்றும். பொருட்களின் விலைவாசி உயர்ந்துவிட்டதென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

இவ் வெளிநடப்பு நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளது.

# வாகனம் மோதி குழந்தை காயம்

(யாழ்ப்பாணம்)

ஆறுமாதக் குழந்தையை அணைத்து வைத்துக்கொண்டு சைக்கிளில் சென்றவர்தொண்டர் ஸ்தாபன வாகனத்தினால் மோதப்பட்டதில் அக்குழந்தைகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரியாலை பார்வதிபாடசாலைக்கு முன்பாக இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீதியை தடைசெய்து சில இளைஞர்கள் சைக்கிளில் நின்று உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில் அவர்கள் பாதையினை விட்டுக்கொடுக்காததனாலேயே இச் சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

நாவலடி அரியாலையைச் சேர்ந்த புலேந்திரன் சதீஸ்வரன் என்னும் 6மாத ஆண் குழந்தையே காயப்பட்டவராவார். (56)

# கொழும்பு பயணிகளுக்கு சைக்கிள்காரரால் 'தொல்லை'

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலும் வேறு இடங்களிலும் பிரயாணிகளை சைக்கிள்களில் ஏற்றிக்கொண்டு செல்பவர்களின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ். நகருக்கு இரவு நேரங்களில் வரும் பயணிகளிடம் இந்த சைக்கிள் ஓட்டிகள் பல ஏமாற்று வேலைகளைச் செய்வதுடன் தனிமையில் வரும் பெண்களிடமும் விஷமத்தனமான முறையில் நடப்பதாகவும் கூறப்படுகின்றது. யாழ். நகரிலிருந்து பூநகரிக்கு பயணிகளை ஏற்றிச் செல்பவர்களும், பூநகரியிலிருந்து வவுனியாவுக்கு ஏற்றிச் செல்பவர்களும் இதுபோன்ற விஷமத்தனமான செயல்களில் ஈடுபடுவதாகத் தெரியவந்துள்ளது.

அண்மையில் கொழும்பிலிருந்து முத்திரைச் சந்திக்கு பலசிரமங்களையும் கடந்து பஸ்ஸில் வந்திறங்கிய பயணிகளின் பொதிகளை இந்த சைக்கிள் ஓட்டிகள் எடுத்துக் கொண்டு மாயமாக மறைந்து விட்டதாகவும் இன்னுமொரு சம்பவத்தில் தாயையும் மகனையும் அவர்கள் கொண்டுவந்த இரு பெட்டிகளையும் ஏற்றிக் கொண்டு கொக்குவில் நோக்கி சென்ற சைக்கிள் ஓட்டி ஒருவர் இடையில் காற்றுப் போனதால் அருகில் உள்ள ஒரு வீட்டில் 'பம்' இருக்கின்றது. காற்றடித்து வருகின்றேன். இரவு நேரத்தில் நீங்கள் பாக்குகளுடன் வீதியில் நிற்பது பாதுகாப்பில்லை. நான் பாக்குகளுடன் சென்று காற்றடித்து விட்டு வருகின்றேன் எனக்கூறி அவ் இருவரையும் வீதியில் விட்டு விட்டு அச் சைக்கிள் ஓட்டி மாயமானர்.

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்னையை தீர்க்க அ. அ. தி. மு. க. பாடுபடும்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னையை தீர்க்கக்கூடிய புதிய ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள அ.இ.அ.தி.க. பாடுபடும் என்று இக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ. இ. அ. தி. மு. க. வின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்;

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இலங்கைத் தமிழரின் இன்னலைத் தீர்ப்பதற்கு இந்திய இலங்கை நாடுகளிடையே புதிய ஒப்பந்தமொன்று செய்யப்படும்.

இலங்கைப் போராளிகள் தமிழகத்தை ஒரு தளமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள். (பூ)

## இலங்கை வங்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பனவுகள் வங்கிக் காசோலைகளாக வழங்கப்படும்.

அரியாலை கிழக்கு, அரியாலை மத்தி, வண். வட மேற்கு, வண். வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி ஆகிய கிராமசேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு மீளக் குடியமர்தல் கொடுப்பனவும் வண்ணார்பண்ணை வடமேற்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மத்தி ஆகிய பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில்முயற்சிக்கான நன்கொடைப்பணம் நாலாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

## வேட்பு மனு தாக்கல்

(புதுடில்லி)

அடுத்த மாதம் பாரதத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவை, லோக சபைக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல் இன்று 19-ஆம் திகதி நடைபெறுமெனத் தேர்தல் பணியகம் அறிவித்துள்ளது. (க)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பத்திரிகைப் பயிற்சிநெறிப் பயிலுநர்களுக்கும், போதனாசிரியருக்குமான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும், முறைசாராக் கல்விப் பிரிவு, சகல போதனாசிரியர்களுக்கும், முதலுதவி நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்குமான கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

# அன்னை பூபதி பொது அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த 12ம் திகதி நடைபெற்ற அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பரீட்சைக் குழு கணித்ததிலும் அதிகளவான மாணவர்கள் பரீட்சையில் கலந்து கொண்டதால் முன்னர் அறிவித்தபடி இன்று 19ம் திகதி இப்பரீட்சை முடிவுகளை வெளியிடமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## 20 ஆயிரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டதாக 'ஏஸியா வீக்' நிருபர் தெரிவித்துள்ளார்.

அழிக்கப்பட்ட வீடுகளில் எஞ்சியுள்ள சில சுவர்களும் பலத்த வெடிப்புகளுடன் காணப்படுகிறது. சீலிங் அமைப்புகள் வீழ்ந்துவிட்டன.

பெற்றோலுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு போத்தல் பெற்றோல் 750 ரூபா வரை விற்கப்படுகிறது தற்போது சைக்கிள் பயணமே யாழ்ப்பாணத்தில் முக்கியமாயிருக்கிறது. திருமண ஊர்வலங்கள் சைக்கிள்களிலேயே நடக்கிறது.

இரவு என்றால் வீடுகள் முழுவதும் இருளடைந்துவிடும். ஒருபோத்தல் மண்ணெண்ணை கொழும்பு விலையைவிட 10 மடங்கு அதிகம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## வடபகுதி

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பாலசிங்கம் 'ஏசியா வீக்' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்:

சுதந்திர தமிழீழம் காண்பதற்கு போராடுவதை விட வேறு வழியில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தமது யாழ்ப்பாண விஜயத்தின் போது பல இடங்களையும் சுற்றிப்பார்வையிட்ட இந்த நிருபர் மக்கள் படும் சொல்லொண்ணாத்துயர் குறித்தும், பொருளாதாரத்தடை, ராணுவ நடவடிக்கை குறித்தும் 'ஏசியா வீக்கில்' விரிவான கட்டுரை எழுதியுள்ளார். (சி)

## ஸ்ரீலங்காவிலிருந்து

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

க்கத்துள்ளது.

அண்மையில் வடபகுதிக்கு வந்த 'ஏசியா வீக்' நிருபர் திரு. யூலியன் வெஸ்ற் எழுதிய கட்டுரையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: கடந்த 17 வருடங்களுக்கு முன் யாழ்.குடா வந்தபோது இருந்தநிலை முற்றாக மாறிவிட்டது. தற்போது யாழ்.குடாசெல்ல ஒரேயொரு பாதை மாத்திரமே உண்டு. அதைவிட மொழி, மதம், கலாசாரம், போர்சூழ்நிலை இலங்கையிலிருந்து யாழ் குடாவை தனியாகப் பிரித்துவிட்டது.

யாழ்ப்பாண மக்கள் சிறந்த உழைப்பாளிகள், நன்றாகப் படித்தவர்கள். மொழி, மதப் பற்றுள்ளவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு பயணிகளுக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்து விட்டாராம்.

நீண்டநேரமாக அந்த சைக்கிள் ஓட்டி வராததினால் சில வாலிபர்களின் உதவியுடன் தாயும் மகளும் வெறும் கையுடன் வீடுபோய்ச் சேர்ந்ததாகவும் இச்சம்பவம் பற்றி விடுதலைப்புலிகளின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

# இலங்கை பிரச்சனையில் மலேசியா தலையிடாது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான பிரச்சனையில் தலையிடும் எண்ணம் மலேசியாவிற்கு இல்லையென்று இலங்கை அரசு இந்தியாவிற்குத்தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அண்மையில் வெளியான செய்தியில் எவ்வித உண்மையுமில்லை என்று இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# வவுனியா-மன்னார் பகுதியில் தொடர்ந்து மோதல்

(லண்டன்)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் பலத்த சண்டைகள் நடைபெற்று வருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இச்சண்டையின்போது இருபகுதியினருக்குமிடையில் பலத்த சேதமேற்பட்டிருக்கலாம் என்றும் பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (ரி)

# ஆயிரக்கணக்கானோர் முருங்கனில் தவிப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா படையினருக்குமிடையில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்களினால் இப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறமுடியாத நிலையில் சிரமப்பட்டு வருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இச்சண்டை தொடர்ந்து நடைபெறுவதால் இங்குள்ள வீடுகளிலிருந்து வெளியேற முடியாத நிலையில் இந்தமக்கள் தவித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திருமலை அம்பாறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரான இராணுவ நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ரி)

# முப்பதாம் நாள் நினைவஞ்சலி



## கப்டன் அப்பன்

[சண்முகம் சிறீதரன்]

| தமிழீழ மண்ணில்: | தமிழீழ மீட்பில்: |
| --- | --- |
| 30-11-1972 | 21-03-1991 |

கைதடியில் பொறுப்பாளராக நின்று
களதிட்டம் நிறைவேற்றி மக்கள் நெஞ்சில்
மாவீரனாக நிற்கும் அன்பு 'அப்பனே'
விண்ணில் விளக்காக விரைவில் நீ சென்றதேனோ!

[கிளாவத்துறையில் வீரமரணமடைந்த ஏனைய விடுதலைப் புலிகளுக்கும் எமது வீர அஞ்சலி]

நாவற்குழி பொதுநூலக வாசகர் வட்டம்,
பொது நூல்நிலையம், நாவற்குழி.

(எ 1234)

# மரண அறிவித்தல்

## சிவசம்பு ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கரவெட்டி மேற்கு விக்னேஸ்வரா கல்லூரி முன்னாள் ஆசிரியரும், தச்சை விநாயகர் ஆலய முன்னாள் முகாமையாளருமான திரு. சிவசம்பு ஆறுமுகம் அவர்கள் 17-04-91 மாலை 4-00 மணிக்குச் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் இலக்குமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தவமணி பாலசுந்தரராசா (கொழும்பு), லேகேஸ்வரி ரூபசிங்கம் (அவுஸ்திரேலியா), மங்கலேஸ்வரி நகுலேஸ்வரன் (கொழும்பு), லோகநாதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 1991-04-18 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லம் ''மங்கள வாசா'' கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்கு சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. இலக்குமிப்பிள்ளை (மனைவி)

''மங்கள வாசா''
கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

(சி-1660)

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

(கண்டாக்டர்)

மானிப்பாயை பிறப்பிடமாக கொண்டவரும், சாவகச்சேரியை வசிப்பிடமாக கொண்டவருமான இளைப்பாறிய புகையிரதப் பகுதி முகாமி (F. P. L,) வேலுப்பிள்ளை சின்னத்துரை 18-4-1991 அன்று காலமானார். இவர் மீனாம்பிகையின் அன்புக்கணவரும், திருஞானசோதி (இளைப்பாறிய இலிகிதர் தொலைதொடர்பு திணைக்களம்), சிவானந்தன் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் பெருந்தெருக்கள் திணைக்களம்), சிவராசா (இளைப்பாறிய இ. போ. ச. பரிசோதகர் கோண்டாவில்), திருமதி சிவகுமாரி, திருமதி சிவதேவி (ஆசிரியை ஸ்ரீ. க. க. வித் மிருசுவில்), சிவபாலன் (இறுதியாண்டு யாழ். மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மினி, கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை டிறிபேக் கல்லூரி), கிருஷ்ணவேணி, லோகேஸ்வரன் (இளைப்பாறிய மின் அத்தியட்சகர் இலங்கை மின்சாரசபை), மகாசிவம் (பொறியியலாளர் கண்டி), தேவகி ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிதா, காவேரி, கஜேந்திரன், சசிகரன், சிறீரங்கன், சிவதர்சனா, சேந்தன், லக்ஷ்மன், றமணன், கோகுலன், சர்மிளா, மாதங்கி ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-4-1991 (இன்று) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி. சிவராசா

''அம்பிகை வாசா''
ஆஸ்பத்திரி வீதி,
சாவகச்சேரி.

(சி-4656)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regesteted as a News Paper at the General Post office Sri Lanka under Licence numper B/100306/81.